# I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
# DEPOSITIONS OF WITNESSES
# (CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
# DEPOSITIONS OF WITNESSES P.W. 7(L.W.16)
# SC.NO.75/2018

| | | |
|---|---|---|
| Name | : | Kasinathan |
| Father Name | : | |
| Occupation | : | Rtd.S.I. of Police |
| Taluk | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 22.10.2025

அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி ஆஜர்.

**விசாரணை தொடங்கிய நேரம்: 12.10 p.m**

**முதல் விசாரணை–**

நான் வேலூர் நில அபகரிப்பு பிரிவில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்து 31.01.2024 அன்று பணி ஓய்வு பெற்றேன். நான் வழக்கு சமயத்தில் விரிஞ்சிபுர காவல் நிலையத்தில் தனி பிரிவு காவலராக பணியில் இருந்தேன். 23.01.2006 அன்று வேலூர் உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளர் அவர்கள் உத்தரவு படி வேலூர் முகாம் அலுவலகத்திலிருந்து காவல் உதவி ஆய்வாளர் திரு. புகழ், ஹரிதாஸ், சீனிவாசன் RSI, 10 ஆயுதப்படை காவலர்கள் அந்தோணி, குகன், மற்றும் 8 பேர் விரிஞ்சிபுரம் காவல் நிலையத்திற்கு சுமார் 16.45 மணிக்கு சென்றோம். துணை காவல் கண்காணிப்பாளர் அவர்கள் மது விலக்கு வேட்டைக்கு செல்வதாக கூறினார். அங்கிருந்து புறப்பட்டு சிவநாதபுரம் கையிலாய மலை திப்பைக்கு சென்றோம். அங்கு சாராயம் விற்று கொண்டிருந்தார்கள். சடையன், மணி, வெங்கடேசன், முனிரத்தினம் ஆகியோர்கள் அங்கு சாராயம் விற்று கொண்டிருந்தார்கள். சீருடையில் இருந்த என்னுடன் வந்த காவலர்களை கண்டதும் குடிக்க வந்தவர்கள் 3 பேர் அங்கிருந்து ஓடிவிட்டனர். சாராயம் விற்றவர்கள் எங்களை கண்டதும் ஓட எத்தனைக்கவில்லை. சடையன் என்பவர் எங்களை பார்த்ததும் "போலீகார

தெவிடியா பசங்க எங்க பொழப்ப கெடுக்க வந்தீட்டீங்களா" என்று துப்பாக்கி காட்டி சுட்டார். நீதிமன்றத்தில் உள்ள பெரிய துப்பாக்கியால் தான் எங்களை நோக்கி சுட்டார். RSI சீனிவாசன் என்பவர் மயிரிழையில் அதிலிருந்து தப்பித்து விட்டார். அங்கிருந்த மணி என்கிற நடுபையன் என்பவர் இன்னொரு துப்பாக்கி எடுத்து எங்களை சுட முயற்சித்தவரை துணை காவல் கண்காணிப்பாளர் அவர்கள் அவர்களை பார்த்து சரணடையுங்கள் என்று எச்சரித்தும் சுட முயற்சித்தவரை தன்னை காப்பாற்றி கொள்ள துணை கண்காணிப்பாளர் அவர்கள் மணி என்பவரை பார்த்து துப்பாக்கியால்(Revolver) சுட்டார். அவருக்கு வலது முட்டிக்கு கீழ் காயம் ஏற்பட்டது. வெங்கடேசன் என்பவர் தான் வைத்திருந்த கத்தியால் காவலர் திரு.அந்தோணி ராஜ் என்பவரை வலது கை, இடது கை, மார்பில் வெட்டு காயம் ஏற்பட்டது. நீதிமன்றத்தில் உள்ள கத்தியால் தான் அவரை தாக்கினார். எதிரி வெங்கடேசனை காவலர் 916 என்பவர் காவலர் 1066 இருவரும் பிடித்து கொண்டார்கள். வெங்கடேசன் அந்தோணிராஜ் பிடிக்க வந்ததால் அவரை தாக்கினார்.

அந்தோணிராஜ், RSI சீனிவாசன், எதிரி மணி ஆகிய 3 பேரையும் வேலூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுமதித்தார்கள். என்னை போலீசார் விசாரித்தார்கள்.

**4 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

காவல் துணை கண்காணிப்பாளர் தலைமையில் 10 பேர் சேர்ந்து ரெய்டுக்கு போனதாக சொல்வது தவறு என்றாலும் நான் சொன்னது போல் அங்கு 4 பேர் சாராயம் விற்று கொண்டிருக்கவில்லை என்றாலும் புள்ளி விவரத்திற்காக அந்த 4 பேர் சாராயம் விற்று கொண்டிருந்ததாகவும் தவறாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. அந்த இடத்தில் முனிரத்தினம் இல்லவே இல்லை என்றாலும் அவர் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கே போகவில்லை என்றாலும் 4 வது எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் அவர் அப்பாவி என்பதால் அவரை சேர்த்துள்ளோம் என்றாலும் சரியல்ல. நாங்கள் 4 வது

எதிரிக்கு எதிராக பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

**1 மற்றும் 2 வது எதிரிகள் தரப்பில் ஆஜராவதற்காக வழக்கு நிறுத்தி வைக்கப்படுகிறது.** நேரம்–12.20 p.m

1 மற்றும் 2 வது எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜரில்லாததாலும் எதிரிகள் கேட்டுக்கொண்டதன் பேரிலும் குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

**விசாரணை முடிந்த நேரம்:02.35 p.m**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

G SANTHI

Digitally signed by G SANTHI
Date: 2025.10.22 21:01:30 +0530

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,

வேலூர்